# இறைத்தூதன்

கத்தோலிக்க வார இதழ்


இயேசு குனிந்து விரலால் தரையில் எழுதிக்கொண்டிருந்தார். ஆனால் அவர்கள் அவரை விடாமல் கேட்டுக்கொண்டிருந்ததால், அவர் நிமிர்ந்து பார்த்து, “உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்” என்று அவர்களிடம் கூறினார். மீண்டும் குனிந்து தரையில் எழுதிக்கொண்டிருந்தார். அவர் சொன்னதைக் கேட்டதும் முதியோர் தொடங்கி ஒருவர் பின் ஒருவராக அவர்கள் யாவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். இறுதியாக இயேசு மட்டுமே அங்கு இருந்தார். அப்பெண்ணும் அங்கேயே நின்றுகொண்டிருந்தார். (யோவான் 8:6-11)

## உக்ரைன் & ரஷ்யா அன்னை மரியாவுக்கு அர்ப்பணிப்பு:

## ரஷ்ய கத்தோலிக்கர் நம்பிக்கை



**வத்திக்கான்:** உக்ரைன், ரஷ்யா ஆகிய இரு நாடுகளோடு உலகமனைத்தையும் அன்னை மரியாவின் களங்கமில்லா திருஇதயத்திற்கு அர்ப்பணித்தது, நம்பிக்கையின் அன்னையாகிய மரியா மீது கத்தோலிக்கர் வைத்திருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடு என்று மாஸ்கோ, இறையன்னை உயர்மறைமாவட்ட முதன்மை குரு Kirill Gorbunov அவர்கள் கூறினார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலகையும், இவ்விரு நாடுகளையும், அன்னை மரியாவுக்கு அர்ப்பணித்தது குறித்து வத்திக்கான் செய்திகளுக்குப் பேட்டியளித்த, அருள்பணி Gorbunov



*அன்னை மரியாவுக்கு அர்ப்பணம் (ANSA)*

அவர்கள், இந்நிகழ்வானது புனித கன்னி மரியா மீது நாம் வைத்துள்ள ஆழமான நம்பிக்கை மற்றும் பக்தியின் வெளிப்பாடு என்றும் இது, போர்கள் அனைத்தும் முடிவுறும் என்பதற்கு ஒரு மாயவித்தை அல்ல எனவும் குறிப்பிட்டார்.

திருத்தந்தை இந்நிகழ்வை மேற்கொண்டதன் முக்கியத்துவம், ரஷ்யா உக்ரைனை ஆக்ரமித்து போரிட்டுவரும் இவ்வேளையில் ரஷ்யர்களின் மனநிலை என்ன? இந்த அர்ப்பணிப்பு கத்தோலிக்கருக்கு மட்டுமா அல்லது மற்ற மக்களுக்கும் உரியதா? போன்ற கேள்விகளுக்கும் பதிலளித்தார், அருள்பணி Gorbunov.

இந்த அர்ப்பண நிகழ்வு, உக்ரைனில் தற்போதுள்ள நிலவரத்தை மாற்றுவதற்கு சில புதுமையை ஆற்றும் என்ற ஏமாற்று செயல் அல்ல என்றும், ஆயினும், இப்பெருந்துயருக்கு ஓர் அமைதியான தீர்வு காண மக்களின் மனங்களில் ஒரு மாற்றத்தை இது உருவாக்கும் என்று நம்புகிறோம் என்றும், அருள்பணி Gorbunov அவர்கள் கூறினார்.

தற்போதைய போர் நிலவரம் ரஷ்யாவிலுள்ள எனக்கு அதிர்ச்சியாகவும் நிச்சயமற்ற உணர்வையும் கொடுத்துள்ளது என்றும், இப்போர் இடம்பெறும் என்று எவருமே நினைத்துப் பார்க்கவில்லை என்றும் உரைத்த அருள்பணி Gorbunov அவர்கள், அமைதி மற்றும் உரையாடலின் அவசியம் குறித்தும் வலியுறுத்திக் கூறினார்.

கடந்த மார்ச் 25 அன்று, உரோம் நேரம் மாலை ஐந்து மணிக்கு, வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் துவங்கிய "ஆண்டவரோடு 24 மணி நேரம்" என்ற தவக்கால திருவழிபாட்டின் இறுதியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உலகின் அனைத்து ஆயர்களோடு ஆன்மீக முறையில் ஒன்றித்து, ரஷ்யாவையும் உக்ரைனையும் அன்னை மரியாவின் களங்கமற்ற திருஇதயத்திற்கு அர்ப்பணித்து இறைவேண்டல் செய்தது அனைவரும் அறிந்த உண்மை.

## மறைந்த கர்தினால் சொட்டர் பெர்ணான்டஸ் அவர்களின் வாழ்க்கை வரலாறு நூல் வெளியிடப்பட்டது!

**கோலாலம்பூர்:** கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் இரண்டாவது பேராயரும், மலேசிய திருஅவையின் முதலாவது கார்தினலுமாகிய மறைந்த சொட்டர் பெர்ணான்டஸ் அவர்களின் வாழ்க்கை வரலாறு நினைவு நூலான 'The Cardinal: The Life and Times of His Eminence Anthony Soter Fernandez' கடந்த வியாழன் 31 மார்ச் 2022 அன்று வெற்றிகரமாக வெளியிடப்பட்டது.

கர்தினால் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுத வேண்டும் என்று நீண்ட காலமாக வேட்கை கொண்டிருந்த சகாயா சுவாரா தொலைத்தொடர் நிலையத்தின் முன்னால் இக்கினரான செம்சன் அவர்கள், கர்தினால் அவர்கள் உயிரோடு இருக்கும் போதே இப்பணியைத் தொடங்கியதாகவும், நூலில் கண்டுள்ள பெருப்பாலான தகவல்களை கர்தினால் அவர்கள் திருத்தி சரிசெய்தாகவும் அவரது உரையில் தெரிவித்தார்.

ஓர் உயர்ந்த மனிதருக்கு குறிப்பாக திருஅவையின் இளவரசருக்கு இந்நூல் அர்ப்பணமாக்குவது குறித்து பெருமிதம் கொள்வதாகவும் அவர் கூறினார். இந்நிகழ்வில் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் கலந்துகொண்டு நூலை அதிகாரப்பூர்வமாக வெளியீடு செய்தார். இந்நூல் வெளியீட்டு பணிக்குத் தலைமை பொறுப்பேற்றிருந்த சகோ. செம்சன், உடனிருந்து செயல்பட்ட அருள்பணி டாக்டர் கிளரான்ஸ்மாஸ், மற்றும் பலருக்கு பேராயர் நன்றி மாலை சூட்டினார்.

இந்நூல் ஒன்று RM 30.00 (தபால் கட்டணம் தவிரத்து) இப்போது விற்பனைக்கு உள்ளது. விருப்புவோர் 03– 2026 6422 அல்லது publication@crc.org.my மின்னஞ்சலுடன் தொடர்புகொள்ளலாம்.

**The Cardinal: The Life and Times of His Eminence Anthony Soter Fernandez**



## ரவாங், புனித யூதா ததேயு பங்கில் சிறப்பு சிலுவைப்பாதை தியானம்

**ரவாங்:** இங்குள்ள யூதா ததேயு பங்கில், இறைமக்கள் சிலுவைப்பாதை தியானத்தில் சிறப்பாகப் பங்குபெற ஊக்குவிக்கும் பொருட்டு, பாரம்பரிய ஆண்டவருடைய பாடுகளின் 14 காட்சிப் பதாகைகள் ஆலய குன்றின் அடிவாரத்திலிருந்து மேலே ஆலயத்தின் வளாகம் வரை நிறுத்தப்பட்டது. மேலும், ‘ஆண்டவர் உயிர்த்தார், மரணத்தை வென்றார்’ என்பதை எடுத்துரைக்கும் வகையில் ஒரு சிலுவை மரம் 15-வது நிலையில் நிறுத்தப் பட்டது.

அங்கு, இறைமக்கள் இறைவேண்டல் செய்யவும், தங்களது விண்ணப்பங்களை ஆண்டவரிடம் எழுப்புவதற்கு ஏதுவாகவும், ஒரு விண்ணப்பப் பெட்டி வைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு வாரமும் பங்குத்தந்தை வின்சன்ட் தோமஸ் அவர்கள் அவற்றை இறை வேண்டலில் உயர்த்தி, எரிப்பார்.

நிறைவாக, வெள்ளிக்கிழமைகளில் ஆலயத்தில் சிலுவைப் பாதை தியானம் மேற்கொள்ளப்பட்டாலும் இதர நாள்களில் இறைமக்கள் தனிநபர்களாகவும், குழுக் களாகவும், குடும்பங்களாகவும், அ.தி.சமூகங்களாவும், பணிக்குழுக்களாகவும் கூடி ஆண்டவரின் பாடுகளைத் தியானிக்க அழைக்கப்பட்டனர். ஆலய வளாகம் காலை மணி 6 முதல் இரவு 10.00 வரை திறந்திருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இயேசுவின் பாடுகளைத் தியானிக்க உதவுவது சிலுவைப் பாதை. அது இயேசு நமக்குக் காட்டிய அன்பின் பாதை.



ஆதாலால், குடும்பங்களாக, அ.தி.சமூகங்களாக ஒன்றுகூடி, சிலுவைப்பாதையில் படிப்படியாகப் பயணிப்பது இத்தவக் காலத்தின் பக்தி முயற்சிகளில் சிறப்பானதாகும். இத்தகைய பயணத்தை மேற்கொள்ளும் போது, இயேசுவின் பாடுகள் என்றோ எங்கோ நிகழ்ந்தவை எனும் எண்ணம் விலகி அவரது பாடுகளில் ஒன்றிக்கும் மனநிலை ஏற்படுகிறதை பலர் உணர்கின்றனர்.

## உக்ரைன் சென்றது திருத்தந்தை வழங்கிய மருத்துவ அவசர மருத்துவ ஊர்தி

**வத்திக்கான்:** போரினால் பெரும் துன்பங்களை அடைந்துவரும் உக்ரேனிய மக்களுக்குத் தனது நெருக்கம், ஆதரவு மற்றும் உதவி ஆகியவற்றின் உறுதியான அடையாளமாக, திருத்தந்தை பிரான்சிஸ், மருத்துவ அவசர ஊர்தியை வழங்கினார். திருத்தந்தை எப்போதும் உறவு பாலங்களைக் கட்டுபவர், அமைதியைக் கொண்டு வருபவர் என்றும், இந்த மருத்துவ அவசர ஊர்தி, குறிப்பாகத் துன்பப்படும் மக்களை அரவணைக்கும் திருத்தந்தையின் அடையாளமாக உள்ளது என்று கர்தினால் Krajewski கூறினர்.

“நான் உங்களுக்கு நெருக்கமாக இருக்கிறேன், நான் உங்களுடன் துயரப்படுகிறேன், மிகுந்த சிரமத்தில் இருக்கும் இந்த நாட்டிற்கு அமைதியைக் கேட்கிறேன், அதற்காக இறைஞ்சுகிறேன்” என்று கூறும் திருத்தந்தையின் அடையாளமாகவே இந்த ஊர்தி உள்ளது என்று திருத்தந்தை உக்ரைன் மக்களுக்குக் கூறினார் என்றும் அந்நாட்டுக்கு இரண்டாவது பயணம் மேற்கொண்டுள்ள கர்தினால் Krajewski எடுத்துரைத்தார்.

# ஜொகூர், புனித அமலோற்பவ அன்னை பங்கு அ.தி.ச.வில் சிறப்பு பாஸ்கா நடவடிக்கைகள்

**ஜொகூர்:** இங்குள்ள அமலோற்பவ அன்னை பங்கின் புக்கிட் இன்டா அடிப்படை திருஅவை சமூகத்தில் பாஸ்கா பெருவிழாவுக்கானத் தயாரிப்புப் பணிகளில் ஒன்றாக தவக்கால செயல் நடவடிக்கைகளில்



ஒன்றாக, ஒப்புரவுச்சடங்கும் திருப்பலியும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கடந்த மார்ச் திங்கள் 22ம் திகதி, செவ்வாய்க் கிழமை நடைபெற்ற இக்கொண்டாட்டத்தில், 15 குடும்பங்கள் கலந்து சிறப்பித்



தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஜொகூர் பாரு பகுதியில் உள்ள மற்றொரு அடிப்படை திருஅவை சமூகத்தில் இரக்கத்தின் ஆண்டவர் மன்றாட்டும், அ.தி.ச. தியான பகிர்வும், கூட்டமும் நடைபெற்றது. 30 குடும்பங்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் அருள்பணி சிரில் மண்ணாயகம் அவர்களும் உடனிருந்தார்.

தவக்காலத்தின் சிறப்பு நடவடிக்கைகளாக இக்கொண்டாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

-எட்ரியன் நாதன்

# நோயாளிக் குழந்தைகளின் குடும்பங்களுக்கு புதிய பராமரிப்பு இல்லம்

வத்திக்கான்: இத்தாலியின் மிலான் மாநகரின் மருத்துவமனைகளில் தங்களின் நோயாளிக் குழந்தைகளின் சிகிச்சைக்காக வருகின்ற ஏழைக் குடும்பங்களுக்கு, கட்டணம் ஏதுமின்றி தங்கும் வசதிகளை அமைத்துக்கொடுப்பதற்கு புதிய திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்திட்டத்திற்கு தன் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நோயாளிக் குழந்தைகளின் பெற்றோர் இலவசமாகத் தங்குவதற்கென்று, மிலான் நகரின் வடக்கே புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு, மார்ச் 29, கடந்த செவ்வாயன்று அடிக்கல் நாட்டப்பட்டதையொட்டி, இத்தாலிய தேசிய UNITALSI அமைப்பின் லொம்பார்தியா கிளையின் தலைவர் வித்தோரே தெ கார்லி அவர்களுக்கு மடல் ஒன்றை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டில் தான் ஆசிர்வதித்த அடிக்கல் ஒன்றுடன், தன் நல்வாழ்த்து மடலை அனுப்பியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இப்புதிய




கட்டடப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரோடும் தன் உடனிருப்பையும், ஆசிரையும் தெரிவித்துள்ளார்.

**இயேசு**
**விதைகளை உருவாக்கச் சொல்லவில்லை,**
**விதைகளாய் உருவாகச் சொன்னார்.**

# சிறப்பு தேவையிலுள்ள குழந்தைகள் பராமரிப்பு பற்றிய கருத்தரங்கு

**ஜொகூர்:** ‘நான் மறைந்துவிட்டால் என் சிறப்புத் தேவைக்குரியக் குழந்தையை யார் கவனித்துக்கொள்வார்கள்?’ என்பது ஒரு சிறப்புத் தேவைக் குழந்தையின் பெற்றோர் எதிர்கொள்ளும் இன்றியமையாதக் கேள்வியாகும். இந்த பெற்றோர்கள் இளமையாக இருக்கும் போது, இதுபோன்ற பிரச்சனைகளில் ஈடுபாடு காட்டுவதில்லை. ஆனால் அவர்கள் இறந்துவிட்டால், இக்குழந்தைகள் நோய்வாய்ப்பட்டால் அல்லது அவர்கள் பக்கத்தில் இல்லாத வேளையில் இதுபோன்ற சிறப்பு கவனத்திற்குரிய குழந்தைகளின் கதி என்னாவது? என்பது கேள்விக் குறியாகிறது.

மலாக்கா-ஜொகூர் மறைமாவட்ட குடும்ப நல ஆணையம் சார்ந்துள்ள பொது நிலையினர் வாழ்வு பணி மற்றும் ஆதரவுக் குழு இத்தலைப்பைப் பற்றி விவாதிக்க ஒரு கருத்தரங்கைத் தொடங்கியது.

மனநல மருத்துவரும் ஆலோசகருமான டாக்டர் ஜோசப் ஜேக்கப் பனிக்குளம் இக்கருத்தரங்கில் சொற்பொழிவாற்றினார். டாக்டர் பனிக்குளம் டெய்லர் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பிரிவில் மூத்த விரிவுரையாளராகவும், கோலாலம்பூர் பள்ளத்தாக்கில் மனநல நிபுணர்கள் மற்றும் மனநல ஆலோசகராகவும் உள்ளார்.

கடந்த மார்ச் 27, 2022 அன்று இயங்கலை வழியாக இரண்டு மணிநேரம் நடைபெற்ற இக்கருத்தரங்கில் 100 பேர் கலந்துகொண்டனர். சிறப்புத் தேவையுடைய குழந்தைகளின் உடன்பிறப்புகளின் பங்கு என்பது பற்றி எழுப்பப்பட்ட மற்றொரு முக்கியமான கேள்விக்கு, பெற்றோரின் பெரும்பாலான கவனம், சிறப்புத் தேவையில் உள்ள குழந்தைகளின் செலுத்தப்படும் போது அவர்கள் தங்கள் பெற்றோரின் துன்பங்களைப் புரிந்து கொண்டு அவரவர் பங்காற்ற வேண்டும் என்று விவரிக்கப்பட்டது.

மேலும், மலேசியாவில், பிறக்கும் குழந்தைகளில் சுமார் 10 சதவீதம் பேர் சிறப்புத் தேவைக்குரிய குழந்தைகளாக உள்ளனர், மேலும் அவர்கள் நலவாழ்வு, கல்வி மற்றும் சமூக நலன் ஆகிய மூன்று அரசாங்க அமைச்சுகளின் பராமரிப்பின் கீழ் உள்ளனர். மாற்றுத்திறனாளிகளைப் பாதுகாக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டாலும், அவை கொள்கைகளாக உள்ளன. இப்போது அரசு சாதாரண




பள்ளிகளில் இப்பிள்ளைகளின் கல்வியை ஒருங்கிணைக்க முயற்சிகள் எடுத்து வருகிறது. இதனால், இக்குழந்தைகள் பள்ளி வளாகத்திற்குள் சிறப்பு வகுப்பில் படிக்க முடியும் என்றும் கருத்துரைத்தார் டாக்டர் ஜோசப் ஜேக்கப்.

# கர்தினால் இரஞ்சித்: இலங்கைக்கு புதியதொரு தொடக்கம் தேவை

கொழும்பு: இலங்கை சுதந்திரம் பெற்றதற்குப் பின்னர், அந்நாடு தற்போது கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுவரும்வேளை, அந்நாட்டிற்கு புதியதொரு தொடக்கமும், தேசிய அளவில் மாற்றமும் தேவைப்படுகின்றன என்று கொழும்பு பேராயர் கர்தினால் மால்கம் இரஞ்சித் அவர்கள் கூறியுள்ளார்.

இலங்கை முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு தற்போது கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது எனவும், அந்நாடு சுதந்திரம் அடைந்து 74 ஆண்டுகள் ஆகியுள்ள இக்காலத்தில் நாட்டினர் அனைவரும் வளமையான வாழ்வுக்கு மேற்கொண்டுள்ள பாதை உண்மையானதா என்ற கேள்விக்குப் பதிலுறுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார், கர்தினால் இரஞ்சித்.

கடந்த மார்ச் 27, ஞாயிறன்று கொழும்பு நகரின் மீட்பராம் கிறிஸ்து பேராலயத்தில் நிறைவேற்றிய திருப்பலி மறையுரையில் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ள கர்தினால் இரஞ்சித் அவர்கள், அரசியல்வாதிகள் மட்டுமல்ல, குடிமக்களும் தெரிந்து கொண்ட தவறான தெரிவுகளால், இன்றைய நாடு, ஒரு நம்பிக்கையற்ற சூழலை எதிர்கொண்டு வருகிறது என்று கூறியுள்ளார்.

# மன்னிக்கும் மாந்தர் மனிதருள் மாணிக்கம்!

நாம் தொடர்ந்து தவக்காலத்தில் பயணிக்கிறோம். இன்றைய முதல் வாசகத்தில், ஆண்டவர் கூறுவது இதுவே, “முன்பு நடந்தவற்றை மறந்துவிடுங்கள், முற்கால நிகழ்ச்சிப் பற்றிச் சிந்திக்காதிருங்கள், இதோ புதுச் செயல் ஒன்றை நான் செய்கிறேன்” என்று பழையதைக் களைந்து புதிய சிந்தனையோடு வாழ நம்மை அழைக்கிறார். புனித பவுல், தங்கள் தவற்றையும் குறைகளையும் மறைக்காமல், நியாயப்படுத்தாமல் ஏற்றுக்கொள்ள முன்வரும் மனிதர் மட்டுமே புதிய வாழ்வை அனுபவிக்க முடியும் என்கிறார். இப்படிப்பட்ட பழைய வாழ்வையே புனித பவுல் “ குப்பை” என்று அழைக்கிறார். இந்த குப்பையைத் தூக்கி எறிவதற்கான அழைப்பை “முன்பு நடந்தவற்றை மறந்து விடுங்கள், முற்கால நிகழ்ச்சி பற்றி சிந்திக்காதிருங்கள்” என்ற வார்த்தைகள் வழியே முதல் வாசகமும் நமக்கு அழைப்பு விடுக்கிறது. இப்படிப்பட்ட மனிதர்கள் மட்டுமே இறைவனது புது வாழ்வையும், அவர் தரும் மன்னிப்பையும் அனுபவிக்க முடியும்.

நற்செய்தியில் பரிசேயர்கள், மறைநூல் அறிஞர்கள் தாங்களே புத்திசாலி என்று காட்டிக் கொள்ளவும், இயேசுவை எதிலாவது சூழ்ச்சி செய்து சிக்கவைப்பதே வழக்கமாக்கிக் கொண்டார்கள். இயேசு அவர்களின் நாசூக்கான கேள்வியைக் கேட்டு அவர்களைச் சிந்திக்க வைத்து, அவர்களைக் கொண்டே பதிலையும் வரவழைக்கும் அதிமிக ஞானமிக்கவர், புத்திசாலி என்பதை இன்றைய நற்செய்தி நமக்கு உணர்த்துகின்றது. இயேசுவின் போதனைகளில் மேலோங்கி நிற்பது இரக்கம் நிறைந்த மன்னிப்பு ஆகும். இறைவன் பாவத்தை வெறுக்கிறார், ஆனால் பாவியை அன்பு செய்கிறார். அதிலும் உயிரைவிட மேலாக அன்பு செய்கிறார். பாவியை மீட்கவே தம் உயிரையும் கொடுக்கிறார்.
“நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன் என்கிறார்” (மத் 9:13) விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணை இயேசுவிடம் கொண்டு வருகிறார்கள். மோயீசன் கட்டளைப்படி கல்லால் அடித்து கொல்ல வேண்டும் என்கிறார்கள் மறைநூல் அறிஞரும் பரிசேயரும். ஆனால் இயேசு ஒன்றுமே சொல்லவில்லை குனிந்து தரையில் எழுதிக்கொண்டிருக்கிறார். என்ன எழுதினார் என்று தெரியாது. அவர்கள் மீண்டும்-மீண்டும் வற்புறுத்தியதால் அவர் நிமிர்ந்து பார்த்து “ உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்” என்கிறார். இறைவனுடைய நீதியும் மனிதனுடைய நீதியும் சந்திக்கும் நேரம். அங்கு வந்தவர்களைச் சிந்திக்க வைக்கிறார்.

இந்த உலகத்தில் தவறு செய்யாத மனிதர்கள் யாரும் இல்லை. அப்படித் தவறுசெய்தவர்களை இயேசுவைப் போன்று மன்னித்து ஏற்றுக்கொள்கின்றபோதுதான் தவறுசெய்தவர் தன்னுடைய தவற்றை உணர்ந்து திருந்தி நடப்பதற்கான வாய்ப்பிருக்கின்றது. அப்படி இல்லாமல், தவறு செய்தவர் தண்டக்கப்படவேண்டும் என்ற மனநிலையோடு செயல்பட்டால் இந்த உலகத்தில் யாரும் மிஞ்சமாட்டார்கள் என்பதுதான் உண்மை. அந்தப் பெண் அழிந்து போக வேண்டும் என்று பரிசேயர்கள் விரும்பியபோது, இயேசு, அப்பெண் வாழ வேண்டும் என்று விரும்புகின்றார். ஆகவே, தீயவர்கள் மனம் மாறி வாழ்வு பெற நாமும் ஒரு காரணமாக இருப்போம். அதன்வழியாக இறையருள் நிறைவாய்ப் பெறுவோம்.

*-சவரிநாதன், சுங்கைபட்டாணி*

**தவக்காலம் 5-ஆம் ஞாயிறு**

1-ம் வாசகம்: யோசுவா 43:16-21
தி. பாடல்: 126: 1-2ab.2cd-3.4-5. 6
2ம் வாசகம்: பிலி 3: 8-14
நற்செய்தி: யோவான் 8: 1-11

ஞாயிறு வாசகம் ஆண்டு 3
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2
திருப்புகழ் மாலை—வாரம் 1